### தமிழ்நாட்டில் – அனைவருக்கும் ஐ.ஐ.டி. திட்டத்தின்கீழ்

# சென்னை - ஐ.ஐ.டி.யில் 381 அரசுப் பள்ளி மாணவர்கள் கல்வி பயிலும் வாய்ப்பு!

## அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி பெருமிதம்!

சென்னை, ஆக. 30 -

அனைவருக்கும் ஐ.ஐ.டி. திட்டத்தின்கீழ் சென்னை ஐ.ஐ.டி. பி.எஸ். தரவு அறிவியல், எலக்ட்ரானிக்ஸ் சிஸ்டம் ஆகிய இணையவழி படிப்புகளை 2022-ஆம் ஆண்டில் அறிமுகம் செய்தது. இதற்கென பிரத்யேக நுழைவுத் தேர்வை ஐ.ஐ.டி. நடத்துகிறது.

அந்த தேர்வில் வெற்றி பெறுபவர்கள் இந்த 2 படிப்புகளை இணைய வழியில் படித்துக் கொள்ளலாம். வேலைவாய்ப்புக்கு உத்தரவாதமுள்ள இந்த படிப்புகளில் அரசுப் பள்ளி மாணவர்களை அதிகளவில் சேர்க்க ஏதுவாக பள்ளிக்கல்வித் துறை பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. இந்த படிப்புகள் குறித்து மாணவர்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துவதுடன், அதற்கான தகுதித் தேர்வுக்கு தயார்ப்படுத்தும் பணிகளும் தமிழ்நாடு அரசால் முன்னெடுக்கப்படு கின்றன. தேர்வாகும் மாணவர்களின் பெற்றோர் வருமானம் ஆண்டு ஒரு லட்சம் ரூபாய்க்கும் குறைவாக இருந்தால், அவர்களின் கல்விக் கட்டணத்தில் 75 சதவீதத்தை ஐ.ஐ.டி.யே வழங்குகிறது. மீதமுள்ள 25 சதவீ தத்தை எஸ்.சி., எஸ்.டி. மாணவர்களாக இருப்பின் அவர்களுக்கான கட்டணத்தை தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் செலுத்துகிறது. மற்ற பிரிவினர் அந்த 25 சதவீத கட்டணத்தை மட்டும் செலுத்தினால் போதும். இணைய வழி கற்றல் என்பதால் இதனுடன் சேர்த்து வேறு படிப்புகளையும் மாணவர்கள் தொடரலாம். அதாவது, ஒரேநேரத்தில் 2 பட்டப் படிப்புகளை மாணவர்கள் முடிக்கலாம். இத்திட்டத்தின் கீழ் 2022 முதல் இது வரை 353 அரசுப் பள்ளி மாணவர்கள் பலன் பெற்றுள்ளனர். தொடர்ந்து நடப்பாண்டிலும் இந்த படிப்புகளில் சேர 170 பேர் தகுதித் தேர்வை எழுதினர். அதில் 28 பேர் வெற்றி பெற்று, சென்னை ஐ.ஐ.டி.யில் பி.எஸ், தரவு அறிவியல், எலக்ட்ரானிக்ஸ் சிஸ்டம் படிப்புகளில் சேர இருக்கின்றனர்.

இதனிடையே, பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் செயல்படுத்தும் திட்டங்களின் துணையோடு அரசுப் பள்ளி மாணவச் செல்வங்கள் கல்வியில் உயரங்களை எட்டிப் பிடித்து சாதனை படைக்கிறார்கள் என்று தெரிவித்துள்ளார். அந்த வகையில், அனைவருக்கும் ஐ.ஐ.டி. திட்டத்தின் கீழ் நமது அரசுப் பள்ளி மாணவர்கள் 28 பேர் ஐ.ஐ.டி. மெட்ராஸ் நிறுவனத்தில் இணைந்துள்ளார்கள் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்வதாகவும், மாணவச் செல்வங்களுக்கு அன்பு வாழ்த்துகள் என்றும் அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி குறிப்பிட்டுள்ளார்.



இராணிப்பேட்டை மாவட்டம் வாலாஜா ஊராட்சியில் நடைபெற்ற “உங்களுடன் ஸ்டாலின்” முகாமை பார்வையிட்டு தீர்வு காணப்பட்ட பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் – இராணிப்பேட்டை மாவட்டக் கழகச் செயலாளர் ஆர்.காந்தி வழங்கினார். உடன் மாவட்ட ஊராட்சி குழு தலைவர் ஜெயந்தி திருமூர்த்தி, ஒன்றிய குழு தலைவர் சேஷா வெங்கட்ரமணன், துணைத் தலைவர் ராதாகிருஷ்ணன், ஒன்றிய குழு உறுப்பினர் செல்வி, ஊராட்சி மன்ற தலைவர் ஈஸ்வரி மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### வலைதளங்களில் வலம் வரும் செய்தி!




# கோவில் நிதியை கல்விக்காகப் பயன்படுத்தினால் என்ன தவறு?

## கபாலீஸ்வரர் கோவில் நிதியை கல்விக்காகச் செலவிட எதிர்த்த மனு தள்ளுபடி!

## உச்சநீதிமன்றம் உத்தரவு!

புதுடெல்லி, ஆக. 30 -

கோவில் நிதியை கல்விக்காக பயன்படுத்தினால் என்ன தவறு? என கேள்வி எழுப்பிய உச்சநீதிமன்றம், கபாலீஸ்வரர் கோவில் நிதியை, கல்விக்காக செலவிடுவதற்கு எதிராக தொடரப்பட்ட மனுவை தள்ளுபடி செய்தும் உத்தரவிட்டது.

சென்னை மயிலாப்பூரில் உள்ள கபாலீஸ்வரர் கோயில் நிலத்தில் கல்லூரி அமைப்பதற்கு எதிர்ப்பு தெரிவித்து தொடரப்பட்ட மேல்முறையீடு வழக்கு உச்சநீதிமன்றத்தில் விசாரணைக்கு வந்தது. அப்போது, தமிழ்நாடு அரசின் அறநிலையத்துறை தரப்பில் ஆஜரான மூத்த வழக்கறிஞர் சண்முகசுந்தரம், கோவில் இடத்தில் கட்டிடம் கட்ட அனுமதி வழங்கப்பட்டிருந்தாலும், அதற்கு வாடகையாக 3 லட்சத்து 19 ஆயிரம் ரூபாயை இந்து சமய அறநிலையத்துறை கோயிலுக்கு வழங்கி வருகிறது என்றும், கபாலீஸ்வரர் கோயிலின் சார்பில்தான், கல்லூரி கட்டப்பட உள்ளதாகவும், கல்விக்காகதான் இடம் பயன்படுத்தப்படுவதாகவும் தெரிவித்தார்.

அப்போது குறுக்கிட்ட நீதிபதிகள், மாணவர்களின் எதிர்காலத்துக்காக கல்லூரி கட்டப்படுகிறது, அதற்காகத்தான் நிதியை பயன்படுத்துகிறார்கள், கல்விக்காக கோவில் நிதியை பயன்படுத்துவதில் என்ன தவறு இருக்கிறது? என்று கேள்வி எழுப்பி மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிட்டனர்.

கபாலீஸ்வரர் கோயில் நிலத்தில் கல்லூரி அமைப்பதற்கு எதிர்ப்பு தெரிவித்து தொடரப்பட்ட மேல்முறையீடு வழக்கு சம்பந்தமாக தமிழ்நாடு அரசின் அறநிலையத் துறை தரப்பில் ஆஜரான மூத்த வழக்கறிஞர் சண்முகசுந்தரம், கோவில் இடத்தில் கட்டிடம் கட்டட அனுமதி வழங்கப்பட்டிருந்தாலும் அதற்கு வாடகையாக ரூ.3,19,000ஐ இந்து சமய அறநிலையத்துறைகோயிலுக்கு வழங்கி வருகிறது கபாலீஸ்வரர் கோயிலின் சார்பில்தான், கல்லூரி கட்டப்பட உள்ளது, கல்விக்காகதான் இடம் பயன்படுத்தப்படுகிறது மாணவர்களின் எதிர்காலத்துக்காக கல்லூரி கட்டப்படுகிறது, அதற்காகத்தான் நிதியை பயன்படுத்துகிறார்கள் என விளக்கமளித்த பிறகு “கல்விக்காக கோவில் நிதியை பயன்படுத்துவதில் என்ன தவறு இருக்கிறது?” என்று கேள்வி எழுப்பி மனுவை உச்ச நீதிமன்றம் தள்ளுபடி செய்து உத்தரவு பிறப்பித்தது.

## கழக இளைஞர் அணி சார்பில் நடத்தப்பட்ட

## முத்தமிழறிஞர் கலைஞரின் 102-வது பிறந்த நாள் விழா மற்றும் திராவிட மாடல் அரசின் 4 ஆண்டு

# சாதனை விளக்க தெருமுனைக் கூட்டங்கள்!



சிவகங்கை வடக்கு ஒன்றியம்,
சிவகங்கை மாவட்டம்.



குருவிகுளம் தெற்கு ஒன்றியம்,
தென்காசி வடக்கு மாவட்டம்.



ஆத்தூர் மேற்கு ஒன்றியம்,
திண்டுக்கல் கிழக்கு மாவட்டம்.



விழுப்புரம் மேற்கு நகரம்,
விழுப்புரம் மத்திய மாவட்டம்.



பவானிசாகர் பேரூர்,
ஈரோடு வடக்கு மாவட்டம்.



ஜெயங்கொண்டம் கிழக்கு ஒன்றியம்,
அரியலூர் மாவட்டம்.



கொங்கணாபுரம் பேரூர்,
சேலம் மேற்கு மாவட்டம்.



திருக்கழுக்குன்றம் தெற்கு ஒன்றியம்,
காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம்.



மண்ணச்சநல்லூர் மேற்கு ஒன்றியம்,
திருச்சி வடக்கு மாவட்டம்.